முழுப்பதிப்புரிமையுடையது

அந்தரங்கமானது

# இலங்கை பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சை - 2024 (2025)

# 65 – இரண்டாம் மொழி - தமிழ்

## புள்ளியிடும் திட்டம்



இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன.

# கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை - 2024 (2025)
## 65 - இரண்டாம் மொழி - தமிழ்

வினாப்பத்திரம் I - 1 x 40 = 40 புள்ளிகள்

### வினாப்பத்திரம் II

* பகுதி I இல் இருந்து இரண்டு வினாக்களுக்கும் பகுதி II இல் இருந்து ஏதேனும் ஒரு வினாவிற்கும் பகுதி III இல் இருந்து இரண்டு வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

### பகுதி I

| | | | |
|---|---|---|---|
| வினா 01 | - கட்டுரை | | 20 புள்ளிகள் |
| வினா 02 | - படம் பார்த்து எழுதுதல் | | 10 புள்ளிகள் |

### பகுதி II

| | | | |
|---|---|---|---|
| வினா 03 | - கிரகித்தல் | ஏதாவது ஒன்று | 10 புள்ளிகள் |
| வினா 04 | - கிரகித்தல் | | |

### பகுதி III

| | | | |
|---|---|---|---|
| வினா 05 | - கடிதம் எழுதுதல்<br>- நன்றியுரை எழுதுதல் | ஏதாவது ஒன்று | 10 புள்ளிகள் |
| வினா 06 | - தமிழில் மொழி பெயர்த்தல்<br>- உரையாடல் | ஏதாவது ஒன்று | 10 புள்ளிகள் |

மொத்தம் 60 புள்ளிகள்

| | |
|---|---|
| வினாப்பத்திரம் I | - 40 புள்ளிகள் |
| வினாப்பத்திரம் II | - 60 புள்ளிகள் |
| மொத்தம் | - 100 புள்ளிகள் |



අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න
CamScanner

Past Papers Wiki


# க.பொ.த (சா.தர)ப் பரீட்சை - 2024 (2025)

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. சகல உதவிப் பரீட்சகர்களும் விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனைப் பேனாவை பயன்படுத்தவும்.
2. பிரதம பரீட்சகர்கள் ஊதா நிறக் குமிழ்முனைப் பேனாவினை விடைத்தாள்களை புள்ளியிடுவதற்குப் பயன்படுத்தவும்.
3. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
4. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, ஒப்பம் இடவும்.
5. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் □ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.
6. எண்கணித பரீட்சகரினால் புள்ளிகள் பிழையற்றது என உறுதிப்படுத்த நீலநிற அல்லது கறுப்புநிறப் பேனாவினை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**




(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

### பல்தேர்வு விடைத்தாள்

01 துளைத்தாள் தயாரித்தல்

i. புள்ளி வழங்கும் திட்டத்தின் படி சரியான தெரிவைத் துளைத்தாளில் அடையாளமிடவும்.
ii. அவ்வாறு அடையாளமிடப்பட்ட இடத்தை வெட்டி நீக்கித் துளைத்தாளைத் தயாரிக்கவும்.
iii. துளைத்தாளை விடைகளின் மீது சரியாக வைத்துக்கொள்ளக்கூடியதாகச் சுட்டெண் அடைப்பையும் வெட்டி நீக்கவும். சரியான விடைகளின் எண்ணிக்கையைக் காட்டும் அடைப்பையும் வெட்டி நீக்கவும்.
iv. சரியான, பிழையான விடைகளை குறிப்பிடக்கூடியதாக ஒவ்வொரு வரிசைக்கும் இறுதியில் வெற்று நிரையொன்றை வெட்டி ஏற்படுத்திக் கொள்ளவும்.
v. **வெட்டிக்கொண்ட துளைத்தாளில் பிரதம பரீட்சகரிடம் கையொப்பம் பெற்று அங்கீகரித்துக் கொள்ளவும்.**



CamScanner

2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.

3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை x அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வத் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் எழுதவும். அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கூட்டத்தில் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை மற்றும் கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். **பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிட்டு பிழையிடவும் புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.**
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக **2 இலக்கங்களில் பதியவும்.** வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் ஒவ்வொரு விடைக்கும் வழங்கப்பட்டுள்ள புள்ளிகளின் தொகையினை ஒவ்வொரு பக்கமாக கூட்டவும். அக்கூட்டுத்தொகை உங்களால் முன்பக்கத்தில் மொத்தம் எனக் குறிப்பிட்ட மொத்தப்புள்ளிகளுக்கு சமமானதா? என பரீட்சிக்கவும்.

* **புள்ளிப்பட்டியல் தயாரித்தல்**

i. ஒரு வினாப்பத்திரம் உள்ள பாடங்கள் தவிர ஏனைய சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது.
ii. ஒவ்வொரு வினாப்பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியான புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும்.
iii. வினாப்பத்திரம் I இற்கான புள்ளிப்பட்டியலில் **"Total Marks"** என்ற நிரலில் **பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும்.**
iv. வினாப்பத்திரம் II இற்கான புள்ளி பட்டியலிலை தயார் செய்யும் போது பகுதிப்புள்ளிகளை பதிவதோடு வினாப்பத்திரம் II இன் இறுதிப்புள்ளியை புள்ளிப்பட்டியலின் **"Total Marks"** என்ற நிரலில் பதியவும்.
v. 43 சித்திரப் பாடத்திற்குரிய I, II, மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதிந்து **எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.**
vi. 21 - சிங்களமொழியும் இலக்கியமும், 22 - தமிழ்மொழியும் இலக்கியமும் ஆகிய இரு பாடங்களும் வினாப்பத்திரம் I இற்குரிய புள்ளி புள்ளிப்பட்டியலில் பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும். வினாப்பத்திரம் II, III இற்கான பகுதிப் புள்ளிகளை உள்ளடக்கி அவ்வினாப்பத்திரத்தின் மொத்தப் புள்ளிகளை புள்ளிப்பட்டியலில் பதிய வேண்டும்.

**முக்கியக் குறிப்பு :**

i. சகல சந்தர்ப்பங்களிலும் ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் உரிய முழுப்புள்ளியானது **முழுத்தானத்தில்** வினாப்பத்திரம் I, II மற்றும் III என்ற புள்ளி பட்டியலின் உரிய நிரலில் உரிய வகையில் பதிதல் வேண்டும். எந்தவிதமான காரணங்களிற்காகவும் வினாப்பத்திரத்தின் இறுதிப்புள்ளியானது **தசம தானங்களில் அல்லது பின்னத்தில் பதியப்படலாகாது.**
ii. புள்ளி பட்டியலில் சகல பக்கங்களிலும் புள்ளிகளை பதிந்த உதவிப் பரீட்சகர், புள்ளிகளை சரிபார்பார்த்த உதவிப் பரீட்சகர், புள்ளிகளை பரீட்சிக்கும் எண்கணித பரீட்சகர் (EMF) மற்றும் பிரதம பரீட்சகர் ஆகியோர் தமது குறியீட்டு இலக்கத்தை எழுதி கையொப்பமிட்டு உறுதிப்படுத்துவது கட்டாயமாகும்.

ooo



අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න
CamScanner

Past Papers Wiki

## பகுதி I கற்றற் பேறுகள்

(1 – 5)

1. தரப்பட்ட சொற்களுக்குப் பொருத்தமான ஒத்த கருத்துள்ள சொற்களைத் தெரிவு செய்வார்.

(6 – 10)

2. தரப்பட்ட சொற்களுக்குப் பொருத்தமான எதிர்க் கருத்துள்ள சொற்களைத் தெரிவு செய்வார்.

(11 – 13)

3. வழங்கப்படும் பேச்சு வழக்குச் சொற்களுக்கு நிகரான எழுத்து வழக்குச் சொற்களைத் தெரிவு செய்வார்.

(14 – 16)

4. தரப்பட்டுள்ள வாக்கியங்களின் இடைவெளிகளை நிரப்புவதற்கு மிகப்பொருத்தமான விடைகளைத் தெரிவு செய்வார்.

(17 - 19 )

5. தரப்பட்டுள்ள வாக்கியங்களுக்குப் பொருத்தமான முடிக்கும் சொற்களைத் தெரிவு செய்வார்.

(20 - 22)

6. தரப்பட்டுள்ள வாக்கியங்களின் இடைவெளிகளை நிரப்புவதற்குப் பொருத்தமான வேற்றுமை உருபேற்ற சொற்களைத் தெரிவு செய்வார்.

(23 – 25)

7. தரப்பட்டுள்ள வாக்கியத்திற்குப் பொருத்தமான வினாவாக்கியத்தைத் தெரிவு செய்வார்.

(26 - 28)

8. தரப்பட்டுள்ள வாக்கியத்திற்குப் பொருத்தமான இணைப்பிடைச் சொல்லைத் தெரிவு செய்வார்.

(29 – 30)

9. கருத்துள்ள வகையில் ஒழுங்குபடுத்தப்பட்ட வாக்கியங்களைக் கொண்ட விடையைத் தெரிவு செய்வார்.

(31)

10. மரபுப் பெயர், தொடர்மொழிக்கு ஒரு மொழி ஆகியவற்றைச் சரியாகத் தெரிவு செய்வார்.

(32)

11. மரபுத் தொடர், பழமொழி ஆகியவற்றைச் சரியாகத் தெரிவு செய்வார்.

(33 – 35)

12. சிங்கள மொழிச் சொற்களுக்குப் பொருத்தமான தமிழ் மொழிபெயர்ப்புச் சொற்களைத் தெரிவு செய்வார்.

(36 – 37)

13. இலக்கண வழுவற்ற வாக்கியங்களைத் தெரிவு செய்வார்.

(38 - 40)

14. தரப்பட்ட தரவுகளை / தகவல்களை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கான விடைகளைத் தெரிவு செய்வார்.



CamScanner

[... / முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**65 | T | I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2024 (2025)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2024 (2025)
General Certificate of Education (Ord. Level) Examination, 2024 (2025)

| | | |
|---|---|---|
| දෙවන බස - දෙමළ I, II<br>இரண்டாம் மொழி - தமிழ் I, II<br>Second Language - Tamil I, II | | පැය තුනයි<br>மூன்று மணித்தியாலம்<br>*Three hours* |

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

අමතර කියවීම් කාලය ප්‍රශ්න පත්‍රය කියවා ප්‍රශ්න තෝරා ගැනීමටත් පිළිතුරු ලිවීමේදී ප්‍රමුඛත්වය දෙන ප්‍රශ්න සංවිධානය කර ගැනීමටත් යොදාගන්න.

**Use additional reading time to go through the question paper, select the questions and decide on the questions that you give priority in answering.**

## இரண்டாம் மொழி - தமிழ் I / දෙවන බස - දෙමළ I / Second Language - Tamil I

அறிவுறுத்தல்கள் :

- ※ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ※ **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
- ※ **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.**
- ※ அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

උපදෙස් :

- ※ **සියලු ම** ප්‍රශ්නවලට පිළිතුරු සපයන්න.
- ※ **1** සිට **40** තෙක් ප්‍රශ්නවල, දී ඇති (1), (2), (3), (4) පිළිතුරුවලින් නිවැරදි හෝ වඩාත් ගැළපෙන හෝ පිළිතුර තෝරා ගන්න.
- ※ ඔබට සැපයෙන උත්තර පත්‍රයේ එක් එක් ප්‍රශ්නය සඳහා දී ඇති කව අතුරෙන්, ඔබ තෝරා ගත් පිළිතුරෙහි අංකයට සැසඳෙන කවය තුළ (X) ලකුණ යොදන්න.
- ※ එම පිළිතුරු පත්‍රයේ පිටුපස දී ඇති අනෙක් උපදෙස් ද පරෙස්සමෙන් කියවා, ඒවා පිළිපදින්න.

**Instructions :**

- ※ Answer **all** questions.
- ※ In each of the questions from **1** to **40,** pick one of the alternatives (1), (2), (3), (4) which is **correct** or **most appropriate**.
- ※ **Mark a cross (X) on the number corresponding to your choice in the answer sheet provided.**
- ※ Further instructions are given on the back of the answer sheet. Follow them carefully.

● **1** தொடக்கம் **5** வரையுள்ள வினாக்களில் தடித்த எழுத்தில் உள்ள சொல்லிற்கு ஒத்த கருத்துள்ள சொல்லைத் தெரிவு செய்க.
**1** සිට **5** තෙක් ප්‍රශ්නවල තද කළු අකුරුවලින් ඇති පදයට **සමාන පදය** තෝරන්න.
Select the **synonyms** for the words in bold print in questions from **1** to 5.

1. யானையின் **உடம்பு** மிகவும் பெரியது.
   (1) தேகம் (2) கால் (3) தலை (4) வயிறு

2. எமது பாடசாலை மாணவர்கள் பல துறைகளில் **ஆற்றல்** உள்ளவர்கள்.
   (1) சுறுசுறுப்பு (2) முயற்சி (3) கடினம் (4) திறமை

3. **ஏழை** விவசாயி ஒருவன் ஒரு கீரியை வளர்த்து வந்தான்.
   (1) வயோதிபன் (2) வியாபாரி (3) உழவன் (4) மனிதன்



අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න
CamScanner

4. நாங்கள் கரும்பு, இளநீர் படைத்து **மனம்** களித்திடுவோம்.
(1) உள்ளம் (2) வாசம் (3) காதல் (4) பண்பு

5. எனக்கு திருகோணமலையைப் பார்க்க **ஆசையாக** இருக்கின்றது.
(1) மகிழ்ச்சி (2) நன்று (3) விருப்பம் (4) ஆர்வம்

● 6 தொடக்கம் 10 வரையுள்ள வினாக்களில் தடித்த எழுத்திலுள்ள சொல்லிற்கு எதிர்க்கருத்துள்ள சொல்லைத் தெரிவு செய்க.

6 සිට 10 තෙක් ප්‍රශ්නවල තද කළු අකුරුවලින් ඇති පදයට **විරුද්ධ පදය** තෝරන්න.

Select the **antonyms** for the words in bold print in questions from 6 to 10.

6. எனது ஆரம்பகால வாழ்க்கை **இன்பம்** நிறைந்தது.
(1) துன்பம் (2) வெறுப்பு (3) வேதனை (4) கவலை

7. படகினுள் ஒவ்வொருவராக **ஏறுங்கள்.**
(1) பாயுங்கள் (2) இறங்குங்கள் (3) அமருங்கள் (4) நில்லுங்கள்

8. கலாநிதி அப்துல் கலாம் அவர்கள் 1931 ஆம் ஆண்டு **பிறந்தார்.**
(1) உதித்தார் (2) இறந்தார் (3) வளர்ந்தார் (4) மறந்தார்

9. நரகாசுரன் மிகவும் **கெட்டவன்.**
(1) அறிவாளி (2) புத்திசாலி (3) தீயவன் (4) நல்லவன்

10. புத்தகத்தின் **மேல்** அட்டை நீல நிறம் ஆகும்.
(1) கீழ் (2) தாழ் (3) பக்கம் (4) அருகில்

● 11 தொடக்கம் 13 வரையான வினாக்களில் தடித்த எழுத்திலுள்ள பேச்சு வழக்குச் சொல்லுக்கு நிகரான எழுத்து வழக்குச் சொல்லைத் தெரிவு செய்க.

11 සිට 13 තෙක් ප්‍රශ්නවල තද කළු අකුරින් දැක්වෙන **කථන බසින් ඇති පදයට අදාළ ලිඛිත පදය** තෝරන්න.

Select the words in **written form for the words in spoken form** given in bold print in questions from 11 to 13.

11. **இந்தாங்க,** இதைப் பிடியுங்கள்.
(1) இனித் தாருங்கள் (2) இதைத் தாருங்கள் (3) இந்தாருங்கள் (4) இப்படித் தாருங்கள்

12. சுற்றுலாவில் **வேற** என்ன பார்த்தீர்கள்?
(1) வேறே (2) வேறு (3) வேறாக (4) வேறேதாவது

13. இந்தத் துண்டுப் பிரசுரத்தை நீங்கள் **வாசியுங்கோ.**
(1) வாசியுங்கள் (2) வாசி (3) வாசிப்போம் (4) வாசிப்பாய்

● 14 தொடக்கம் 16 வரையான ஒவ்வொரு வினாவிலுமுள்ள இடைவெளியை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

14 සිට 16 තෙක් ප්‍රශ්නවල **හිස්තැන් පිරවීම සඳහා වඩාත් ම සුදුසු පදය** තෝරන්න.

Select the most **suitable word to fill in the blank** in each question from 14 to 16.

14. பிரதம அதிதி பாடசாலைக்கு வருகை தந்தார். அதிபர் …………… வரவேற்றார்.
(1) அவரின் (2) அவரை (3) அவர் (4) அவருக்கு

15. மோட்டார் சைக்கிள் வேகமாக வந்தது. …………… தம்பி மீது மோதியது.
(1) அதனுடன் (2) அவை (3) அதில் (4) அது

16. கம்பர் பல படைப்புக்களை உருவாக்கினார். …………… கம்பராமாயணம் மிகச் சிறந்த படைப்பாகும்.
(1) அவற்றை (2) அவர்களில் (3) அவை (4) அவற்றுள்



CamScanner

- 17 தொடக்கம் 19 வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் பொருத்தமான **முடிக்கும் சொல்லைத்** தெரிவு செய்க.
17 සිට 19 තෙක් එක් එක් ප්‍රශ්නයට සුදුසු **අවසාන පදය** තෝරන්න.
Select the suitable **ending word** for each question from **17** to **19**.

17. நானும் கமலாவும் தமிழ் ……………
(1) படிக்கின்றேன் (2) படிக்கின்றோம் (3) படிக்கிறார்கள் (4) படிக்கிறாய்

18. நான் நாளை காலை மருந்து ……………
(1) குடிப்பேன் (2) குடித்தேன் (3) குடிக்கின்றேன் (4) குடிப்போம்

19. எமது நாட்டின் அபிவிருத்திக்காக நாம் அர்ப்பணிப்புடன் ……………
(1) செயலாற்றுவாய் (2) செயலாற்றுவோம் (3) செயலாற்றுவீர் (4) செயலாற்றுவேன்

- 20 தொடக்கம் 22 வரையான ஒவ்வொரு வினாவிலுமுள்ள இடைவெளிக்குப் **பொருத்தமான சொல்லைத்** தெரிவு செய்க.
20 සිට 22 තෙක් එක් එක් ප්‍රශ්නයේ ඇති හිස්තැනට **සුදුසු වචනය** තෝරන්න.
Select the **suitable word** to fill in the blank for each question from **20** to **22**.

20. நான் …………… சேர்ந்து வீட்டுத்தோட்டம் செய்கிறேன்.
(1) தாத்தாவால் (2) தாத்தாவின் (3) தாத்தாவை (4) தாத்தாவுடன்

21. எலிகளை அழிக்க …………… வளர்க்க முடிவு செய்தனர்.
(1) பூனைகளை (2) பூனையால் (3) பூனையின் (4) பூனையோடு

22. …………… வீடு அழகானது.
(1) கமலத்தோடு (2) கமலத்தை (3) கமலத்தால் (4) கமலத்தின்

- 23 தொடக்கம் 25 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஆரம்பத்தில் தரப்பட்டுள்ள வாக்கியத்தை விடையாகப் பெறக்கூடிய **மிகப் பொருத்தமான வினாவைத்** தெரிவு செய்க.
23 සිට 25 තෙක් එක් එක් ප්‍රශ්නයේ මුලින් දී ඇති වාක්‍යය පිළිතුර වශයෙන් ලබා ගැනීමට **වඩාත් සුදුසු ප්‍රශ්නය** තෝරන්න.
Select the **most suitable question** to get the sentence given at the beginning as the answer in each question from **23** to **25**.

23. கண்காட்சி 20 ஆம் திகதி ஆரம்பமாகும்.
(1) கண்காட்சி எவ்வாறு ஆரம்பமாகும்?
(2) கண்காட்சி எப்போது ஆரம்பமாகும்?
(3) கண்காட்சி யாரால் ஆரம்பமாகும்?
(4) கண்காட்சி எங்கே ஆரம்பமாகும்?

24. மைதானத்தில் மாணவர்கள் விளையாடுகிறார்கள்.
(1) மைதானத்தில் என்ன விளையாடுகிறார்கள்?
(2) மைதானத்தில் யாரோடு விளையாடுகிறார்கள்?
(3) மைதானத்தில் எப்படி விளையாடுகிறார்கள்?
(4) மைதானத்தில் யார் விளையாடுகிறார்கள்?

25. இலங்கை இரத்தினக் கற்களுக்கும் புகழ்பெற்றது.
(1) இலங்கை ஏன் புகழ்பெற்றது?
(2) இலங்கை எதற்குப் புகழ்பெற்றது?
(3) இலங்கை எதற்கும் புகழ்பெற்றது?
(4) இலங்கை எதனால் புகழ்பெற்றது?



අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න
CamScanner

● 26 தொடக்கம் 28 வரையான ஒவ்வொரு வினாவிலும் உள்ள இடைவெளியை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

26 සිට 28 තෙක් එක් එක් ප්‍රශ්නයේ හිස්තැන සම්පූර්ණ කිරීමට **වඩාත් සුදුසු පදය** තෝරන්න.

Select the **most suitable word** to fill in the blank in each question from 26 to 28.

**26.** நாங்கள் ஆசிரியரைச் சந்திக்கச் சென்றோம். ............... அவரைச் சந்திக்க முடியவில்லை.
(1) ஆகவே (2) எனவே (3) எப்படியாவது (4) எனினும்

**27.** அந்தப் புத்தகம் ............... வேறு புத்தகம் ஒன்றை எடுப்போம்.
(1) ஆகையால் (2) இல்லாவிட்டால் (3) எப்படியாவது (4) ஆனால்

**28.** ஏலம், மிளகு, கறுவா, கராம்பு முதலிய வாசனைத் திரவியங்கள் பயிரிடப்படுகின்றன. ............... வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.
(1) இவை (2) இது (3) அது (4) அவை

● **29, 30 ஆகிய ஒவ்வொரு வினாவிலும் ஒழுங்கின்றித் தரப்பட்டுள்ள வாக்கியங்கள் கருத்துள்ள வகையில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள விடையைத் தெரிவு செய்க.**

29 හා 30 යන එක් එක් ප්‍රශ්නයේ අපිළිවෙළින් දී ඇති වාක්‍ය **නිවැරදි පිළිවෙළට** ගළපා ඇති වරණය තෝරන්න.

Select **the option that is arranged in an appropriate order** of the following jumbled sentences in questions 29 and 30.

**29.** அ - அப்போது நான் அவளிடம் ஓடுவேன்.
ஆ - விடுமுறை முழுவதும் என்னுடன் விளையாடுவாள்.
இ - அவள் என்னை அணைத்துக் கொள்வாள்.
ஈ - விடுமுறை கிடைத்ததும் ரஞ்சனா வருவாள்.
(1) ஆ, அ, இ, ஈ (2) ஈ, அ, ஆ, இ (3) ஈ, அ, இ, ஆ (4) ஈ, ஆ, அ, இ

**30.** அ - ஒவ்வொரு போட்டியின் இறுதியிலும் முடிவுகள் அறிவிக்கப்பட்டன.
ஆ - கல்வி அமைச்சர் தேசிய கொடியை ஏற்றினார்.
இ - விளையாட்டுப் போட்டி நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.
ஈ - மாணவர்கள் தேசிய கீதத்தை இசைத்தனர்.
(1) ஆ, இ, ஈ, அ (2) ஆ, ஈ, இ, அ (3) இ, அ, ஆ, ஈ (4) இ, ஈ, ஆ, அ

● **31, 32** ஆகிய வினாக்களில் 'அ' பிரிவில் உள்ள பகுதியை **முடிப்பதற்குப் பொருத்தமான சொல்** 'ஆ' பிரிவில் உள்ளது. அவற்றை 'அ' இற்கமைய ஒழுங்குமுறையில் கொண்டமைந்த விடைகளைத் தெரிவு செய்க.

**31** හා **32** ප්‍රශ්නවල 'அ' යටතේ ඇති කොටසට **ගැළපෙන අවසන් පදය** 'ஆ' කොටසේ දක්වා ඇත. එය 'அ' කොටසේ අනුපිළිවෙළට අනුව නිවැරදිව ගළපා ඇති වරණය තෝරන්න.

In questions **31** and **32**, the **appropriate ending words** of the pharases given in 'அ' are indicated in 'ஆ'. Select the option that matches the words correctly according to the order of 'அ'.

**31.**

| 'அ' | 'ஆ' |
|---|---|
| 1. குதிரை | அ. சொல்லும் |
| 2. குடு குடு என | ஆ. கனைக்கும் |
| 3. வாழை | இ. நடந்தாள் |
| 4. பல்லி | ஈ. குட்டி |

(1) அ, ஈ, ஆ, இ (2) அ, இ, ஈ, ஆ (3) ஆ, இ, ஈ, அ (4) ஆ, இ, அ, ஈ

**32.**

| 'அ' | 'ஆ' |
|---|---|
| 1. அரை மனிதன் | அ. குறைவற்ற செல்வம் |
| 2. அநாதை | ஆ. பெற்றோரும் உற்றாரும் இல்லாதவன் |
| 3. நிறைகுடம் | இ. மதிப்பில்லாதவன் |
| 4. நோயற்ற வாழ்வு | ஈ. தளும்பாது |

(1) ஆ, இ, ஈ, அ (2) ஆ, ஈ, இ, அ (3) இ, ஆ, அ, ஈ (4) இ, ஆ, ஈ, அ



CamScanner

- 33 தொடக்கம் 35 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள சிங்களச் சொல்லுக்குப் பொருத்தமான தமிழ்ச் சொல்லைத் தெரிவு செய்க.
33 සිට 35 දක්වා එක් එක් ප්‍රශ්නයේ දී ඇති සිංහල වචනයට ගැළපෙන **දෙමළ වචනය** තෝරන්න.
Select the **Tamil word** that matches the Sinhala word in each question from 33 to 35.

33. හැඟීම
(1) பிரச்சினை (2) விளக்கம் (3) உணர்வு (4) வாய்ப்பு

34. පටුමග
(1) ஒழுங்கை (2) வீதி (3) மேம்பாலம் (4) இடம்


35. පුදුම
(1) வியப்பு (2) புதுமை (3) நயப்பு (4) விகடம்

- 36, 37 ஆகிய வினாக்களில் **இலக்கண வழுவற்ற** வாக்கியத்தைத் தெரிவு செய்க.
36 සහ 37 ප්‍රශ්නවල **ව්‍යාකරණානුකූලව නිවැරදිව** යෙදී ඇති වාක්‍යය තෝරන්න.
Select the sentence which is **grammatically correct** in questions 36 and 37.

36. (1) தெரு நாய்களும், நாய்க்குட்டிகளும் கூட என்னைத் துரத்தியது.
(2) தெரு நாய்களும், நாய்க்குட்டிகளும் கூட என்னைத் துரத்தினர்.
(3) தெரு நாய்களும், நாய்க்குட்டிகளும் கூட என்னைத் துரத்தின.
(4) தெரு நாய்களும், நாய்க்குட்டிகளும் கூட என்னைத் துரத்தினார்கள்.

37. (1) தம்பியுடன் தங்கை சந்தைக்குப் போகின்றன.
(2) தம்பியுடன் தங்கை சந்தைக்குப் போகின்றார்கள்.
(3) தம்பியுடன் தங்கை சந்தைக்குப் போகிறாள்.
(4) தம்பியுடன் தங்கை சந்தைக்குப் போகிறான்.

- நீர் மின்வலுப் பயன்பாடு தொடர்பான பின்வரும் வரைபை அவதானித்து 38 தொடக்கம் 40 வரையான ஒவ்வொரு வினாவுக்கும் சரியான விடையைத் தெரிவு செய்க.
ජල විදුලි බලය සම්බන්ධයෙන් පහත දී ඇති ප්‍රස්තාරය භාවිතයෙන් 38 සිට 40 දක්වා එක් එක් ප්‍රශ්නයට අදාළ නිවැරදි පිළිතුර තෝරන්න.
Select the correct answer for each question from 38 to 40 usage of the graph on using hydro electricity power given below.




| | | |
|---|---|---|
| 1 | வீட்டுச் செயற்பாடுகள் | 38% |
| 2 | கைத்தொழில் | 34% |
| 3 | வியாபாரம் | 26% |
| 4 | சமயம் சார்ந்தவை | 01% |
| 5 | வீதி விளக்குகள் | 01% |

38. அதிகளவில் நீர்மின் வலு பயன்படுத்தப்படுவது
(1) வியாபார செயற்பாடுகளுக்கு ஆகும்.
(2) வீட்டுச் செயற்பாடுகளுக்கு ஆகும்.
(3) கைத்தொழில் செயற்பாடுகளுக்கு ஆகும்.
(4) சமயம் சார் செயற்பாடுகளுக்கு ஆகும்.

39. ஆகக் குறைந்த அளவு நீர்மின் வலு பயன்படுத்தப்படுவது
(1) வீட்டுத் துறைக்கும் வியாபாரத் துறைக்கும்
(2) சமயத் துறைக்கும் வியாபாரத் துறைக்கும்
(3) சமயத் துறைக்கும் வீதி விளக்குகளுக்கும்
(4) வியாபாரத் துறைக்கும் வீதி விளக்குகளுக்கும்

40. வியாபாரத் துறைக்குப் பயன்படுத்தப்படுவது மொத்த நுகர்வில்
(1) இருபத்தாறு சதவீதமாகும்.
(2) முப்பத்தாறு சதவீதமாகும்.
(3) முப்பத்து நான்கு சதவீதமாகும்.
(4) ஒரு சதவீதமாகும்.

✻ ✻

අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

CamScanner

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

අ.පො.ස (සා.පෙළ) විභාගය / க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சை - 2024 (2025)

විෂය අංකය / பாட இலக்கம்: 65 | විෂයය / பாடம்: இரண்டாம் மொழி – தமிழ்

ලකුණු දීමේ පටිපාටිය / புள்ளி வழங்கும் திட்டம்
I පත්‍රය /பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 01 | 11. | 03 | 21. | 01 | 31. | 03 |
| 02. | 04 | 12. | 02 | 22. | 04 | 32. | 04 |
| 03. | 03 | 13. | 01 | 23. | 02 | 33. | 03 |
| 04. | 01 | 14. | 02 | 24. | 04 | 34. | 01 |
| 05. | 03 | 15. | 04 | 25. | 03 | 35. | 01 |
| 06. | 01 | 16. | 04 | 26. | 04 | 36. | 03 |
| 07. | 02 | 17. | 02 | 27. | 02 | 37. | 03 |
| 08. | 02 | 18. | 01 | 28. | 04 | 38. | 02 |
| 09. | 04 | 19. | 02 | 29. | 03 | 39. | 03 |
| 10. | 01 | 20. | 04 | 30. | 02 | 40. | 01 |

✪ විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට / ஒரு சரியான விடைக்கு 01 ලකුණු බැගින් / புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் 1 x 40 = 40



CamScanner

## கட்டுரை எழுதுதல்

1. பரீட்சார்த்தி எழுதிய விடயங்கள் பின்வரும் அ, ஆ, இ என்ற மூன்று அம்சத் திட்டத்தின் படி மதிப்பிடப்பட்டு புள்ளிகள் வழங்கப்பட வேண்டும்.

அ. உள்ளடக்கம், பொருத்தம், அளவு
வழங்கப்பட்ட தலைப்பிற்குப் பொருத்தமாக எழுதப்படல், போதியளவு விடயங்கள் இடம்பெறல், சொல்லளவு கருத்திற் கொள்ளப்படல். (08 புள்ளிகள்)

ஆ. கருத்து வெளிப்பாடும், மொழிச் செம்மையும்
கருத்துக்களைத் தெளிவாக முன்வைத்தல், எழுத்துக் கூட்டல் மற்றும் இலக்கண வழுக்கள் இன்மை (08 புள்ளிகள்)

இ. எழுதும் நுட்பங்கள்
பந்திகள் இடம்பெறல், பந்திகளுக்கிடையே தொடர்பு காணப்படல், குறியீடுகள் பொருத்தமாக இடப்படல், உறுப்பமைவாகவும் நேர்த்தியாகவும் எழுதுதல். (04 புள்ளிகள்)

2. கட்டுரைக்கான மொத்தப் புள்ளிகள்
அ. 08 புள்ளிகள்
ஆ. 08 புள்ளிகள்
இ. 04 புள்ளிகள்
} 20 புள்ளிகள்

3. கட்டுரைக்குப் புள்ளி வழங்கும் முறை
எடுத்துக்காட்டு

$$\frac{04}{08}+\frac{04}{08}+\frac{03}{04}=\frac{11}{20}$$



අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න
CamScanner

# இரண்டாம் மொழி - தமிழ் II

## பகுதி I / I කොටස / Part I

**1.** பின்வரும் தலைப்புக்களில் **ஒன்றைத்** தெரிவு செய்து, தரப்பட்ட விடயங்களை உள்ளடக்கி ஏறத்தாழ **100** சொற்களில் கட்டுரை ஒன்று எழுதுக.
දෙන ලද තොරතුරුවලට අනුව පහත මාතෘකාවලින් **එකක්** පිළිබඳ වචන **100** ක පමණ රචනයක් ලියන්න.
Write an essay of about **100** words on **one** of the following topics according to the given guidelines.

(அ) நான் சென்ற புகையிரதப் பயணம்
- (i) அறிமுகம்
- (ii) பயணத்தின் ஆரம்பம்
- (iii) புகையிரதப் பயணத்தின் முக்கியத்துவம்
- (iv) பயணத்தினால் பெற்ற அனுபவங்கள்
- (v) முடிவுரை

(ஆ) டெங்கு ஒழிப்பு
- (i) அறிமுகம்
- (ii) டெங்கு நோய் பரவும் வழிமுறைகள்
- (iii) டெங்கு நோய் பரவுவதனால் ஏற்படும் ஆபத்துக்கள்
- (iv) டெங்கு நோயைத் தடுப்பதற்கான வழிமுறைகள்
- (v) முடிவுரை

(இ) எமது ஊர் தபால் நிலையம்
- (i) அறிமுகம்
- (ii) தபால் நிலைய அமைவிடம்
- (iii) தபால் நிலையத்தினால் வழங்கப்படும் சேவைகள்
- (iv) தபால் நிலையத்தின் மூலம் நாம் பெறும் நன்மைகள்
- (v) முடிவுரை

(ஈ) விளம்பரம் செய்வதன் முக்கியத்துவம்
- (i) அறிமுகம்
- (ii) விளம்பரங்களின் வகைகள்
- (iii) விளம்பரங்களினால் ஏற்படும் நன்மைகள்
- (iv) விளம்பரங்களினால் ஏற்படும் தீமைகள்
- (v) முடிவுரை

(உ) உடைந்த குடையின் சுயசரிதை
- (i) அறிமுகம்
- (ii) உருவான விதம்
- (iii) குடை பயன்படுத்தப்பட்ட விதம்
- (iv) குடையின் தற்போதைய நிலை
- (v) முடிவுரை

(20 புள்ளிகள்)

பகுதி - II

1. கற்றற் பேறுகள்

- தரப்பட்ட வழிகாட்டற் குறிப்புக்களைப் பின்பற்றி எழுதுவார்.
- இலக்கண வழுக்களின்றி மொழிச் செம்மையுடன் எழுதுவார்.
- கட்டுரை உறுப்புக்களை (முகவுரை, உடல், முடிவுரை) அனுசரித்து எழுதுவார்.
- சொற்களின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு எழுதுவார்.

அ. நான் சென்ற புகையிரதப் பயணம்

(i) அறிமுகம்
- பயணம் செல்வதற்குத் தயாரான நிலை
- புகையிரத நிலையத்திற்குச் செல்லல்

(ii) பயணத்தின் ஆரம்பம்
- புகையிரத நிலையத்தில் பயணச்சீட்டு பெற்ற விதம்
- புகையிரதத்தில் ஏறி அமர்ந்தமை
- புகையிரதம் புறப்பட ஆயத்தமாகிய நேரம்

(iii) புகையிரத பயணத்தின் முக்கியத்துவம்
- செலவு குறைவு
- களைப்பின்றி நீண்டதூரம் பயணம் செய்யலாம்.
- பல்வேறு காட்சிகளைக் கண்டு களிக்கலாம்..

(iv) புகையிரதப் பயணத்தினால் பெற்ற அனுபவங்கள்
- அழகான வெளிப்புறக் காட்சிகளை பார்வையிட்டமை.
- ஏனைய பயணிகளுக்கு உதவியமை.
- சக பயணிகளுடன் நட்புக் கொண்டமை.

(v) முடிவுரை
- புகையிரதப் பயணத்தின் நிறைவு
- நிறைவில் ஏற்பட்ட உணர்வுகளை வெளிப்படுத்தல்



අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න
CamScanner

**ஆ. டெங்கு ஒழிப்பு**

**(i). அறிமுகம்**

- டெங்கு நோய் அனைவருக்கும் அச்சுறுத்தலான ஒன்று.

**(ii). டெங்கு நோய் பரவும் வழிமுறைகள்**

- நீர் தேங்கிய இடங்களில் முட்டையிட்டு தமது இனத்தை பெருக்குதல்.
- சிரட்டைகள், யோகட் கப், டயர்கள் போன்றவற்றைச் சூழலில் வீசுவதால் நுளம்புகள் பெருகுதல்.

**(iii). டெங்கு நோய் பரவுவதனால் ஏற்படும் ஆபத்துக்கள்**

- நோயாளியால் டெங்கு நோயை எதிர் கொள்ள முடியாமலிருத்தல்.
- ஏனையோருக்கும் தொற்றக்கூடியது.
- உயிர் கொல்லி நோய்.

**(iv). டெங்கு நோயைத் தடுப்பதற்கான வழிமுறைகள்**

- சூழலைச் சுத்தம் செய்தல்.
- நீர் தேங்கி நிற்கும் இடங்களை ஒழித்தல்.
- மக்களுக்கு விழிப்புணர்வூட்டல்.

**(v). முடிவுரை**

டெங்கிலிருந்து மீண்டு ஆரோக்கிய வாழ்வை ஆரம்பிப்போம்.

**இ. எமது ஊர் தபால் நிலையம்**

**(i) அறிமுகம்**

- தபால் நிலையத்தின் பெயர்

**(ii) தபால் நிலைய அமைவிடம்**

- தபால் நிலைய முகவரி
- பிரதான நகரிலிருந்து அதற்குச் செல்லும் வழி

**(iii) தபால் நிலையத்தினால் வழங்கப்படும் சேவைகள்**

- கடிதங்களை அனுப்பலாம்.
- பொதிகள், காசுக்கட்டளைகளை அனுப்பலாம்.
- முத்திரை, தபாலுறை போன்றவற்றைப் பெற்றுக் கொள்ளலாம்.
- பணம் சேமிக்கலாம்.

**(iv) தபால் நிலையத்தின் மூலம் நாம் பெறும் நன்மைகள்**

- கடிதங்கள், பொதிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.
- நம்பகமான தன்மைக் காணப்படும்.

**(vi) முடிவுரை**

- தபால் நிலையம் ஒரு முக்கியமான இடம் என்பதைக் குறிப்பிடல்.



CamScanner

**ஊ. விளம்பரம் செய்வதன் முக்கியத்துவம்**

**(i) அறிமுகம்**

- விளம்பரங்கள் என்றால் என்ன? எனக் குறிப்பிடல்

**(ii) விளம்பரங்களின் வகைகள்**

- பத்திரிகை, துண்டுப்பிரசுரங்கள்
- தொலைக்காட்சி, வானொலி

**(iii) விளம்பரங்களினால் ஏற்படும் நன்மைகள்**

- பொருட்கள் சேவைகள் பற்றிய அறிவு கிடைக்கின்றது.
- பல்வேறு பொருட்கள் சேவைகளிலிருந்து எமக்கு தேவையானவற்றைத் தெரிவு செய்து கொள்ளலாம்.
- வியாபாரிகளது விற்பனை அதிகரிக்கும்.

**(iv) விளம்பரங்களினால் ஏற்படும் தீமைகள்**

- தேவையற்ற பொருட்கள் சேவைகளையும் பெற்றுக் கொள்வதற்கு முயற்சித்தல்.
- பணம் வீண் விரயமாதல்.
- மக்கள் ஏமாற்றப்படுதல்.

**(v) முடிவுரை**

- விளம்பரங்களுக்கு அரச கட்டுப்பாடு அவசியம்.
- சிறந்த விளம்பரங்களை மாத்திரம் தெரிவு செய்தல்

**உ. உடைந்த குடையின் சுயசரிதை**

**(i) அறிமுகம்**

- குடை தன்னை அறிமுகம் செய்தல்

**(ii) குடை உருவான / செய்யப்பட்ட விதம்**

- உருவான / செய்யப்பட்ட தொழிற்சாலை
- காலம்
- பயன்படுத்தப்பட்ட மூலப்பொருட்கள்
- நிறம், அளவு

**(iii) குடை பயன்படுத்தப்பட்ட விதம்**

- பாவனைக்காகப் பெற்றுக்கொண்ட விதம்
- பாவனை முறை, கவனமாகப் பேணியமை
- மழை வெயில் போன்றவற்றின்போது பயன்படுத்தியவரின் மகிழ்ச்சியான மனநிலை

**(iv) குடையின் தற்போதைய நிலை**

- உடைந்திருத்தல்
- குடையின் துயரமான மனநிலை



අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න
CamScanner

(v) முடிவுரை

- அடுத்து என்ன நடக்குமோ என ஏங்கிய மனநிலை
அல்லது திருப்திகரமான சேவையை வழங்கிய மகிழ்ச்சிகரமான மனநிலையை வெளிப்படுத்த

**நியதிகள்**

**பரீட்சார்த்தி எழுதிய விடயங்கள் பின்வரும் அ, ஆ, இ ஆகிய மூன்று நியதிகளுக்கு அமைய மதிப்பிடப்பட்டு புள்ளிகள் வழங்கப்பட வேண்டும்.**

**அ) உள்ளடக்கம், பொருத்தம், அளவு - 8 புள்ளிகள்**

| இல. | நியதிகள் | புள்ளிகள் |
|---|---|---|
| 01 | வழங்கப்பட்ட தலைப்பிற்குப் பொருத்தமான அறிமுகம், உள்ளடக்கம், முடிவுரை என்பவற்றுடன் போதியளவு உதாரணங்கள், மேற்கோள்கள், அனுபவங்கள், முக்கியத்துவம் என்பன உள்ளடங்கியதாக குறிப்பிட்ட சொல் வரையறையைப் பேணி எழுதப்படல் | (6 – 8 புள்ளிகள்) |
| 02 | வழங்கப்பட்ட தலைப்பிற்குப் பொருத்தமான அறிமுகம், உள்ளடக்கம், முடிவுரை என்பவற்றுடன் போதியளவு உதாரணங்கள், மேற்கோள்கள், அனுபவங்கள், முக்கியத்துவம் என்பவற்றுள் குறைந்தது இரண்டையேனும் உள்ளடக்கியதாகவும் சொல் வரையறையைக் கருத்திற் கொள்ளாமலும் எழுதப்படல் | (3 – 5 புள்ளிகள்) |
| 03 | வழங்கப்பட்ட தலைப்பிற்குப் பொருத்தமான அறிமுகம், உள்ளடக்கம், முடிவுரை என்பவற்றை பொருத்தமாக எழுதாமல் உதாரணங்கள், மேற்கோள்கள், அனுபவங்கள், முக்கியத்துவம் என்பன குறைவாக எழுதப்பட்டும் சொல் வரையறையைக் கருத்திற் கொள்ளாமலும் எழுதப்படல் | (0 – 2 புள்ளிகள் |

**ஆ. கருத்து வெளிப்பாடும் மொழிச் செம்மையும் 08 புள்ளிகள்**

| இல. | நியதிகள் | புள்ளிகள் |
|---|---|---|
| 01 | அறிமுகம், உள்ளடக்கம், முடிவுரை ஆகிய விடயங்களைத் தெளிவாக முன்வைத்தல், சேர்த்து பிரித்து எழுதும் முறை மற்றும் எழுத்து, சொல், ஆகிய இலக்கண வழுக்களின்றியும் எழுதப்படல். | (6 – 8 புள்ளிகள்) |
| 02 | அறிமுகம், உள்ளடக்கம், முடிவுரை ஆகிய விடயங்களைத் ஏதேனும் இரண்டை முழுமையாக முன்வைத்து, சேர்த்து, பிரித்து எழுதும் முறை மற்றும் எழுத்து, சொல், ஆகியவற்றில் குறைந்த இலக்கண வழுக்களுடனும் எழுதப்படல். | (3 – 5 புள்ளிகள்) |
| 03 | அறிமுகம், உள்ளடக்கம், முடிவுரை ஆகிய விடயங்களைத் கருத்திற்கொள்ளாது தெளிவற்ற முன்வைப்பு, இலக்கண வழுக்களுடன், விடயத்திற்குப் பொருத்தமற்றதாக எழுதப்படல். | (0 – 2 புள்ளிகள்) |

**இ. எழுத்து நுட்பங்கள் 04 புள்ளிகள்**

| இல. | நியதிகள் | புள்ளிகள் |
|---|---|---|
| 01 | பந்திகள் பொருத்தமாக எழுதப்பட்டு பந்திகளுக்கிடையே தொடர்பு காணப்பட்டு, குறியீடுகள் பொருத்தமாக இடப்பட்டு உறுப்பமைவாகவும் நேர்த்தியாகவும் எழுதப்படல் | (04 புள்ளிகள்) |
| 02 | பந்திகள் பொருத்தமாக எழுதப்பட்டு பந்திகளுக்கிடையே குறைந்தளவான தொடர்பு காணப்பட்டு, குறியீடுகள் பொருத்தமாக இடப்படாமலும் உறுப்பமைவின்றியும் நேர்த்தியின்றியும் காணப்படல் | (2 – 3 புள்ளிகள்) |
| 03 | பந்திகள் பொருத்தமாக எழுதப்படாது பந்திகளுக்கிடையே தொடர்பு குன்றியும் குறியீடுகள் கவனிக்கப்படாமலும் உறுப்பமைவின்றியும் நேர்த்தியின்றியும் காணப்படல் | (0 – 1 புள்ளிகள்) |

2. பின்வரும் படத்தை அடிப்படையாகக் கொண்டு கருத்துள்ள ஐந்து வாக்கியங்கள் எழுதுக.
(ஒவ்வொரு வாக்கியத்திலும் ஆகக் குறைந்தது நான்கு சொற்களேனும் இருத்தல் வேண்டும்.)
පහත සඳහන් පින්තූරය පදනම් කර ගනිමින් **අර්ථවත් වාක්‍ය පහක්** ලියන්න.
(සෑම වාක්‍යයක ම **වචන හතරකට නොඅඩුව** තිබිය යුතු ය.)
Write **five meaningful sentences** based on the picture given below.
(Each sentence should contain **at least four words.**)



(10 புள்ளிகள்)

**2. கற்றற் பேறுகள்**

**படத்தைப் பார்த்து பொருத்தமான கருத்துள்ள வாக்கியங்களை எழுதுவார்.**

**வாக்கிய இயைபை (எழுவாய், பயனிலை, செயற்படுபொருள்) அனுசரித்து எழுதுவார்.**

**வழுக்களின்றி (எழுத்து, சொல், இலக்கணம்) வாக்கியங்களை எழுதுவார்.**

**படத்தை அடிப்படையாகக் கொண்டு கருத்துள்ள வாக்கியங்கள் ஐந்து எழுதுதல்**
**(ஒவ்வொரு வாக்கியத்திலும் ஆகக் குறைந்தது நான்கு சொற்களேனும் இருத்தல் வேண்டும்)**

1. இங்கு சிறுவர்கள் கதைத்துக்கொண்டிருக்கிறார்கள்./ கதைத்துக்கொண்டு இருக்கிறார்கள்.
2. இங்கு தமிழ், முஸ்லிம், சிங்கள மொழி பேசும் பிள்ளைகள் / பல்லின சிறுவர்கள் இருக்கிறார்கள்.
3. மாணவர்கள் / பிள்ளைகள் அனைவரும் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள்.
4. ஒரு மாணவன் கையில் பந்து வைத்திருக்கிறான்.
5. இங்கு ஆறு பிள்ளைகள் இருக்கிறார்கள்.
6. இங்கு இரண்டு ஆண்பிள்ளைகள் இருக்கிறார்கள்.
7. இங்கு நான்கு பெண்பிள்ளைகள் இருக்கிறார்கள்.

**இவை போன்ற, படத்திற்குப் பொருத்தமான வாக்கியங்கள் இருப்பின் புள்ளி வழங்குக.**

| இல. | நியதிகள் | புள்ளிகள் |
|---|---|---|
| 01 | கருத்துத் தெளிவுள்ள எழுத்துப்பிழையற்ற நான்கு சொற்களைக் கொண்ட முழுமையான வாக்கியம் | 02 |
| 02 | கருத்துத் தெளிவுள்ள மூன்று / நான்கு சொற்களைக்கொண்ட இரண்டிற்குக் குறைவான எழுத்துப்பிழையுள்ள முழுமையான வாக்கியம் | 01 |
| 03 | கருத்துத் தெளிவற்ற இரண்டிற்கும் மேற்பட்ட சொற்பிழை, எழுத்துப்பிழைகள் உள்ள வழுவான வாக்கியம் | 00 |



අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න
CamScanner

## பகுதி II / II කොටස / Part II

- 3, 4 ஆம் வினாக்களுள் ஏதேனும் **ஒன்றுக்கு** மாத்திரம் விடை எழுதுக.
  3 සහ 4 ප්‍රශ්නවලින් **එකකට** පමණක් පිළිතුරු සපයන්න.
  Answer only **one** question from questions 3 and 4.

3. பின்வரும் பாடலை வாசித்து, தரப்பட்டுள்ள வினாக்களுக்குப் **பூரணமான வாக்கியங்களில்** விடை எழுதுக.
   පහත කවි පෙළ කියවා, අසා ඇති ප්‍රශ්නවලට **සම්පූර්ණ වාක්‍යවලින්** පිළිතුරු සපයන්න.
   Read the following poem and answer the questions given below in **complete sentences**.

> அழகு மிக்க சந்திரனை
> ஆகாயத்தில் காண்பித்தே,
> பழமும், பாலும் ஊட்டிடுவாய்,
> பாட்டும் கதையும் கூறிடுவாய்,
>
> தமிழைக் கற்றுத் தந்திடுவாய்,
> தத்துப் பித்தெனப் பேசிடினும்,
> அமுதம் அமுதம் என்றிடுவாய்,
> அணைத்து முத்தம் தந்திடுவாய்.

(i) சந்திரன் எங்கே காட்டப்படுகின்றது?
(ii) எதனைக் கற்றுக் கொடுப்பாள்?
(iii) அமுதம் எதற்கு ஒப்பிடப்படுகின்றது?
(iv) இங்கு பாட்டும் கதையும் கூறுபவர் யார்?
(v) இப்பாடலில் வரும் வானத்தைக் குறிக்கும் ஒத்த சொல் யாது?

(10 புள்ளிகள்)

**3. கற்றல் பேறுகள்**

**பாடலை வாசித்து பொருள் விளங்கித் தரப்பட்ட வினாக்களுக்கு விடை எழுதுவார்.**
**பூரணமான வாக்கியங்களில் விடை எழுதுவார்.**
**எழுத்துக்கள், சொற்கள் வழுவின்றி எழுதுவார்.**
**இலக்கண விதிகளை அனுசரித்து வாக்கியங்களை எழுதுவார்.**

(i). சந்திரன் ஆகாயத்தில் காட்டப்படுகின்றது. /காணப்படுகின்றது
(ii). தமிழைக் கற்றுக் கொடுப்பாள்.
(iii). குழந்தையின் மழலை மொழி அமுதத்திற்கு ஒப்பிடப்படுகின்றது. / தத்துப் பித்தெனப் பேசுதல்
(iv). பாட்டும் கதையும் கூறுபவர் அம்மா ஆவார்.
(v). இப்பாடலில் வரும் வானத்தைக் குறிக்கும் ஒத்தசொல் ஆகாயம் ஆகும்.

| இல. | நியதிகள் | புள்ளிகள் |
|---|---|---|
| 01 | எழுத்துப்பிழையற்ற, வினாவிற்குப் பொருத்தமான எழுவாய் பயனிலைகளைக் கொண்ட கருத்துத் தெளிவுள்ள முழுமையான வாக்கியம் | 02 |
| 02 | எழுத்துப்பிழை உள்ள, வினாவிற்குப் பொருத்தமான முழுமையற்ற வாக்கியம் அல்லது பாடலடி ஆயின் | 01 |
| 03 | எழுத்து மற்றும் சொற்பிழை இரண்டுக்கு மேற்பட்டிருப்பின் | 00 |



CamScanner

4. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து, தரப்பட்டுள்ள வினாக்களுக்குப் **பூரணமான வாக்கியங்களில்** விடை எழுதுக.
පහත දැක්වෙන ඡේදය කියවා, අසා ඇති ප්‍රශ්නවලට **සම්පූර්ණ වාක්‍යවලින්** පිළිතුරු සපයන්න.
Read the following passage and answer the questions given below in **complete sentences**.

முன்னொரு காலத்தில் அரபு நாட்டு அரசர் ஒருவர் கிருஷ்ணதேவராயருக்கு அதிசய ரோஜாச் செடி ஒன்றைப் பரிசளித்தார். அதை மன்னர் தனது தோட்டத்தில் நட்டு வைத்தார். ஒரு நாள் அச்செடிகளில் பூத்த ரோஜாப் பூக்களைத் தெனாலிராமனின் மகன் பறித்தான். அதனைக் கண்ட காவலாளிகள் தெனாலிராமனின் மகனைப் பிடிக்க முயற்சித்தனர். உடனே தெனாலிராமன் தனது மகனைக் காப்பாற்றுவதற்காகத் தனது மேலாடையைக் கழற்றி மகனின் தலை மேல் போர்த்தி விட்டான்.

(i) அரபு நாட்டு அரசர் கிருஷ்ணதேவராயருக்கு எதனைப் பரிசளித்தார்?
(ii) காவலாளிகள் எதனைக் கண்டனர்?
(iii) தெனாலிராமன் மகனைக் காப்பாற்ற என்ன செய்தார்?
(iv) அரபு நாட்டு அரசர் எப்போது வாழ்ந்தார்?
(v) பந்தியில் இடம்பெற்றுள்ள ஒத்த கருத்துச் சொற் சோடியொன்றை எழுதுக.

(10 புள்ளிகள்)

**4. கற்றல் பேறுகள்**

**உரைப்பகுதியை வாசித்துக் கிரகித்துத் தரப்பட்ட வினாக்களுக்குப் பொருத்தமான விடை எழுதுவார்.**
**பூரண வாக்கியங்களில் விடையளிப்பார்.**
**எழுத்துக்கள், சொற்கள் வழுவின்றி எழுதுவார்.**
**இலக்கண விதிகளை அனுசரித்து வாக்கியங்களை எழுதுவார்.**

(i). அரபு நாட்டு அரசர் கிருஷ்ணதேவராயருக்கு, அதிசய ரோஜாச் செடி ஒன்றைப் பரிசளித்தார். 2
(ii). காவலாளிகள் தென்னாலிராமனின் மகன் ரோஜாப்பூக்களைப் பறிப்பதைக் கண்டனர்.
ரோஜாப்பூக்களைத் தென்னாலிராமனின் மகன் பறிப்பதைக் காவலாளிகள் கண்டனர்.
தென்னாலிராமனின் மகன் ரோஜாப்பூக்களைப் பறிப்பதைக் காவலாளிகள் கண்டனர்.
(iii). தென்னாலிராமன் தனது மகனைக் காப்பாற்றுவதற்காகத் தனது மேலாடையைக் கழற்றி மகனின் தலைமேல் போர்த்தி விட்டார். 2
(iv). முன்னொரு காலத்தில் அரபு நாட்டு அரசர் வாழ்ந்தார் 2
(v). அரசர் - மன்னர்

| இல. | நியதிகள் | புள்ளிகள் |
|---|---|---|
| 01 | எழுத்துப்பிழையற்ற, வினாவிற்குப் பொருத்தமான எழுவாய் பயனிலைகளைக் கொண்ட கருத்துத் தெளிவுள்ள முழுமையான வாக்கியம் | 02 |
| 02 | எழுத்துப்பிழை உள்ள, வினாவிற்குப் பொருத்தமான முழுமையற்ற வாக்கியம் | 01 |
| 03 | எழுத்து மற்றும் சொற்பிழை இரண்டுக்கு மேற்பட்டிருப்பின் | 00 |

07/14 79938
078 3525278



අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න
CamScanner

## பகுதி III / III කොටස / Part III

- **5, 6** ஆம் வினாக்களுக்கு விடை எழுதுக.
  **5** සහ **6** ප්‍රශ්නවලට පිළිතුරු සපයන්න.
  Write answers to the questions **5** and **6**.

**5.** பாடசாலைக்கு சமூகமளிக்க முடியாமை தொடர்பாக வகுப்பாசிரியருக்கு **கடிதம்** ஒன்று எழுதுக.
ඔබට පාසලට පැමිණීමට නොහැකි බව සඳහන් කරමින් පන්තිභාර ගුරුවරයාට **ලිපියක්** ලියන්න.
Write a **letter** to the class teacher stating that you are unable to attend school.

அல்லது / **නැතහොත්** / **Or**

உமது பாடசாலையின் தமிழ் இலக்கிய மன்றச் செயலாளராக உம்மைக்கருதி, தமிழ் மொழி தின விழாவிற்கான **நன்றியுரை** ஒன்று எழுதுக.
ඔබේ පාසලේ දෙමළ සාහිත්‍ය සංගමයේ ලේකම් ඔබ යැයි සිතා, දෙමළ භාෂා දින උත්සවය සඳහා සුදුසු **ස්තුති කතාවක්** ලියන්න.
Consider yourself as the secretary of the Tamil Literary Association of your school and write a **Vote of Thanks** for the Tamil language day event.

(10 புள்ளிகள்)

**5. கற்றற் பேறுகள் - கடிதம்**

- **அமைப்பைப் பின்பற்றி எழுதுவார்.**
- **வினாவிற்குப் பொருத்தமான விடயத்தை கவனத்திற் கொண்டு எழுதுவார்.**
- **விடயத்திற்குப் பொருத்தமான மொழிநடையைப் பின்பற்றி எழுதுவார்.**
- **இலக்கண விதிகளைப் பின்பற்றி எழுதுவார்.**
- **சொல் வரையறையைக் கருத்திற் கொண்டு எழுதுவார்.**

**அமைப்பு** **03 புள்ளிகள்**

முகவரி
உள்முகவரி
விளிப்பு
தலைப்பு
முடிப்பு
ஒப்பம்

**உள்ளடக்கம்** **05 புள்ளிகள்**

- பாடசாலைக்கு சமூகமளிக்க முடியாமல் போனமை பற்றிக் குறிப்பிடல்
- பாடசாலைக்கு சமூகமளிக்க முடியாமல் போனமைக்கான காரணத்தைக் குறிப்பிடல்
- மன்னிப்புக் கோரல்

**மொழிநடை** **02 புள்ளிகள்**



CamScanner

நியதிகள் - அமைப்பு 03 புள்ளிகள்

| இல. | நியதிகள் | புள்ளிகள் |
|---|---|---|
| 01 | முகவரி, உள்முகவரி, விளிப்பு, தலைப்பு, முடிப்பு, ஒப்பம் ஆகிய 6 உறுப்புகளும் சரியாக எழுதப்பட்டிருப்பின் | 03 |
| 02 | முகவரி, உள்முகவரி, விளிப்பு, தலைப்பு, முடிப்பு, ஒப்பம் ஆகிய உறுப்புக்களின் ஏதேனும் மூன்று உறுப்புகள் இருப்பின் | 02 |
| 03 | ஏதேனும் ஒன்று அல்லது இரண்டு உறுப்புகள் இருப்பின் | 01 |
| 04 | உறுப்புகள் எதுவும் எழுதப்படாமல் இருப்பின் | 00 |

நியதிகள் - உள்ளடக்கம் 05 புள்ளிகள்

| இல. | நியதிகள் | புள்ளிகள் |
|---|---|---|
| 01 | பாடசாலைக்கு சமூகமளிக்க முடியாமல் போனமை பற்றிக் குறிப்பிடல், காரணம், மன்னிப்புக் கோரல் | 04 - 05 |
| 02 | பாடசாலைக்கு சமூகமளிக்க முடியாமல் போனமை பற்றிக் குறிப்பிடல் | 02 - 03 |
| 03 | இம்மூன்று விடயங்களில் ஏதேனும் ஒன்று குறிப்பிடப்பட்டிருத்தல் | 01 |
| 04 | இவை எதுவும் குறிப்பிடப்படவில்லை எனின் | 00 |

நியதிகள் - மொழிநடை 02 புள்ளிகள்

| இல. | நியதிகள் | புள்ளிகள் |
|---|---|---|
| 01 | எழுத்துப்பிழைகளற்ற பூரணமானதும் நியமமொழி கொண்டதுமான வாக்கியங்கள். | 02 |
| 02 | ஓரிரு எழுத்துப்பிழைகளுடன் கருத்துள்ள பூரணமற்ற வாக்கியம் | 01 |
| 03 | 5 இற்கும் மேற்பட்ட எழுத்துப்பிழைகள், கருத்துத் தெளிவின்மை | 00 |

37035 52 MO



අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න
CamScanner

அல்லது

**கற்றற் பேறுகள் - நன்றியுரை**

**விடயத்திற்குப் பொருத்தமான மொழிநடையைப் பின்பற்றுவார்.**

**அமைப்பு - 03 புள்ளிகள்**

1. பாடசாலை தமிழ் இலக்கிய மன்றத்தில் உள்ளோரை விளித்தல்
2. தமிழ் மொழித்தின விழா தொடர்பாக கூறுதல்
3. முடிப்பு - அனைவருக்கும் நன்றி கூறுதல்

**உள்ளடக்கம் - 05 புள்ளிகள்**

- பாடசாலையில் நடைபெறும் தமிழ் மொழித்தினம் பற்றி கூறுதல்.
- பாடசாலை அதிபர் ஆசிரியர்களுக்கு நன்றி கூறுதல்.
- பங்கு பற்றிய மாணவர்கள் அவர்களின் பெற்றோர்களுக்கு நன்றி கூறுதல்.
- இவ்விழாவிற்கு உதவிகள் வழங்கியவர்களுக்கு நன்றி கூறுதல்.

**மொழிநடை - 02 புள்ளிகள்**

- **கருத்துத் தெரிவு**
- **வழுக்களின்மை**

| நியதிகள் | புள்ளிகள் |
|---|---|
| அமைப்பு - 03 புள்ளிகள் | |
| - விளிப்பு, விடயம், முடிப்பு இவை மூன்றும் இருப்பின் | 03 புள்ளிகள் |
| - இவற்றுள் எவையேனும் இரண்டு இருப்பின் | 02 புள்ளிகள் |
| - இவற்றுள் எவையேனும் ஒன்று மாத்திரம் இருப்பின் | 01 புள்ளி |
| - இவை அனுசரிக்கப்படாதவிடத்து | 00 புள்ளி |
| உள்ளடக்கம் - 05 புள்ளிகள் | |
| - தமிழ் மொழித்தினம் பற்றியும் அனைவருக்கும் நன்றியும் கூறப்பட்டிருப்பின் | 4-5 புள்ளிகள் |
| - தமிழ் மொழித்தினம் பற்றி குறிப்பிடாமல் அனைவருக்கும் பொருத்தமாக நன்றி கூறப்பட்டிருப்பின் | 2-3 புள்ளிகள் |
| - எவரேனும் ஒரு பகுதியினருக்கு மாத்திரம் நன்றி கூறப்பட்டிருப்பின் | 01 புள்ளி |
| - நன்றி பற்றி குறிப்பிடப்படாமல் (பொதுவாக) எழுதப்பட்டிருப்பின் | 00 புள்ளி |
| மொழிநடை - 02 புள்ளிகள் | |
| - எழுத்துப்பிழைகளற்ற பூரணமான நியம மொழி கொண்ட வாக்கியங்கள் எழுதப்பட்டிருப்பின் | 02 புள்ளிகள் |
| - ஓரிரு எழுத்துப்பிழைகளுடன் கருத்துள்ள பூரணமற்ற வாக்கியம் | 01 புள்ளி |
| - 5 இற்கும் மேற்பட்ட எழுத்துப் பிழைகள், கருத்துத் தெளிவின்மை | 00 புள்ளிகள் |



CamScanner

6. பின்வரும் சிங்கள வாக்கியங்களை **அல்லது** ஆங்கில வாக்கியங்களைத் **தமிழில்** மொழிபெயர்க்குக.
පහත දැක්වෙන සිංහල වාක්‍ය **හෝ** ඉංග්‍රීසි වාක්‍ය **දෙමළ** භාෂාවට පරිවර්තනය කරන්න.
Translate the following Sinhala sentences **or** English sentences into **Tamil**.

(i) සමන් මගේ යාළුවා ය. / Saman is my Friend.
(ii) පොත කොහේ ද? / Where is the book?
(iii) මාලා රචනාවක් ලිව්වා ය. / Mala wrote an essay.
(iv) ඔබ ඊයේ බිව්වේ මොනවා ද? / What did you drink yesterday?
(v) මම ඔබව හමුවීමට කැමතියි. / I like to meet you.

**அல்லது / නැතහොත් / Or**

உங்கள் பணப்பை தொலைந்து விட்டது தொடர்பில் உமக்கும் உமது பகுதி பொலிஸ் நிலைய அதிகாரி ஒருவருக்கும் இடையிலான உரையாடல் ஒன்றை 5 சோடி வாக்கியங்களில் எழுதுக.

ඔබේ මුදල් පසුම්බිය නැතිවීම සම්බන්ධයෙන් ඔබ හා ඔබේ ප්‍රදේශයේ පොලිස් නිලධාරියා අතර ඇතිවන සංවාදයක් දෙබස් යුගල **5**කින් ලියන්න.

Write a dialogue in 5 pairs of sentences between you and a police officer of your area regarding your lost wallet with money.

(10 புள்ளிகள்)

**6. கற்றற் பேறுகள் - மொழிபெயர்த்தல்**

**கொடுக்கப்பட்ட வாக்கியங்களை கருத்துப் பிழையின்றி தமிழில் மொழிபெயர்த்து எழுதுவார்.**

**இலக்கண விதிகளை அனுசரித்து எழுதுவார்.**

(i). சமன் என்னுடைய நண்பர்
(ii). புத்தகம் எங்கே?
(iii). மாலா ஒரு கட்டுரை எழுதினாள்
(iv). நீங்கள் நேற்று என்ன குடித்தீர்கள்?
(v). நான் உங்களைச் சந்திக்க விரும்புகிறேன்

| இல. | நியதிகள் | புள்ளிகள் |
|---|---|---|
| 01 | கருத்துத் தெளிவுள்ள எழுத்துப்பிழையற்ற பொருத்தமான மொழிபெயர்ப்பைக் கொண்ட முழுமையான வாக்கியம் | 02 |
| 02 | கருத்துத் தெளிவுள்ள பொருத்தமான மொழிபெயர்ப்பு இரண்டிற்குக் குறைவான எழுத்துப்பிழையுள்ள முழுமையான வாக்கியம் | 01 |
| 03 | கருத்துத் தெளிவற்ற இரண்டிற்கும் மேற்பட்ட சொற்பிழை, எழுத்துப்பிழைகள் | 00 |

අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න
CamScanner

அல்லது

**கற்றற் பேறுகள் - உரையாடல்**

உரையாடல் அமைப்பைப் பேணி எழுதுவார்.

வாக்கியங்களை வழுக்களின்றி எழுதுவார்.

விடயத்திற்குப் பொருத்தமான உரையாடலை எழுதுவார்.

கொடுக்கப்பட்ட அறிவுறுத்தல்களைப் பின்பற்றி எழுதுவார்.

**அமைப்பு - 03 புள்ளிகள்**

- உரையாடல் அமைப்பில் எழுதப்பட வேண்டும்.
- நான், பொலிஸ் அதிகாரி என்ற முறையில் உரையாடல் இடம்பெற வேண்டும்.

**உள்ளடக்கம் - 05 புள்ளிகள்**

- பணப்பை தொலைந்த இடம்
- தொலைத்தவருக்கு ஏற்பட்ட சந்தேகம்
- பணப்பையில் உள்ளடங்கியுள்ள பொருட்கள்
- பணப்பையின் வடிவம், நிறம்
- தேடித்தருமாறு வினயமாக கேட்டல்.

**மொழிநடை - 02 புள்ளிகள்**

- பேச்சு மொழி
- கருத்துத் தெளிவு
- வழுக்களின்மை

| நியதிகள் | புள்ளிகள் |
|---|---|
| அமைப்பு 03 புள்ளிகள் | |
| - உரையாடல் அமைப்பில் 5 சோடி பூரண வாக்கியங்களில் எழுதப்படல் | 03 புள்ளிகள் |
| - உரையாடல் அமைப்பில் எழுதப்பட்டு 3-4 சோடிகளில் எழுதப்படல் | 02 புள்ளிகள் |
| - முறையான உரையாடல் அமைப்பில் எழுதப்படாமல் 1 -2 சோடிகளில் எழுதப்படல் | 01 புள்ளி |
| - உரையாடல் அமைப்பு பேணப்படாமல் எழுதப்படல் | 00 புள்ளி |
| உள்ளடக்கம் 05 புள்ளிகள் | |
| - தலைப்புக்கு பொருத்தமாக விடயத்தெளிவோடு 10 வரிகளில் (5 சோடி) எழுதப்படல் | 05 புள்ளிகள் |
| - தலைப்புக்கு பொருத்தமாக குறைவான விடயத்தெளிவோடு 10 வரிகளிலும் குறைவாக (5 சோடியை விடக் குறைவாக) எழுதப்படல் | 03- 04 புள்ளிகள் |
| - பொருத்தமான தலைப்பு, குறைவான விடயத் தெளிவோடு 6 வரிகளுக்கு (3 சோடிக்கு) குறைவாக எழுதப்படல் | 01 - 02 புள்ளி |
| - தலைப்பிற்குப் பொருத்தமற்று எழுதப்படல் | 00 புள்ளி |
| மொழிநடை 02 புள்ளிகள் | |
| - பேச்சு மொழி / நியம மொழியில் எழுதப்பட்டு கருத்துத் தெளிவுடன் எழுத்து, சொல் வழுக்களின்றி எழுதப்படல் | 02 புள்ளிகள் |
| - பேச்சு மொழி / நியம மொழியில் எழுதப்பட்டு கருத்துத் தெளிவுடன் எழுத்து, சொல் வழுக்களோடு எழுதப்படல் | 01 புள்ளி |
| - கருத்துத் தெளிவின்றியும் அதிகளவாக,எழுத்து, சொல் வழுக்களோடு எழுதப்படல் | 00 புள்ளிகள் |



Past Papers Wiki

CamScanner